தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை,(ஆலையம்மன் கோவில் அருகில்),எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.243447590

**ஆணை நாள் 12.11.2020**

**முன்னிலை**

**திரு ரா. ராஜகோபால், இ.ஆ.ப., (ஓ)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA-6641/SCIC/2020**

Thiru G.JAVEED SHAH -- மேல்முறையீட்டாளர்

/எதிர்

பொதுத் தகவல் அலுவலர் /
காவல் துணை ஆணையாளர், -- பொது அதிகார அமைப்பு
காவல் துணை ஆணையாளர் அலுவலகம்,
மயிலாப்பூர் மாவட்டம்,
சென்னை பெருநகர காவல், சென்னை-4.

## ஆணை

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் 19.03.2020 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனுவில், சென்னை அண்ணா சாலை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 08.08.2019 தேதியிட்டு அளித்த தனது மகள் அளித்த புகார் மனு தொடர்பாக 3 இனங்களில் தகவல்கள் கோரியுள்ளார். அதன்பின்னர், பிரிவு 19(1)-ன்கீழ் 19.05.2020-ல் முதல் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். அதன்பின்னர் மனுதாரர், பிரிவு 19(3)-ன்கீழ் 21.08.2020-ல் தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கு இரண்டாம் மேல் முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார்.

2. மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனுவின்மீது இவ்வாணையத்தால், 16.09.2020 அன்று பிறப்பிக்கப்பட்ட ஆணையில், மனுதாரர் கோரும் தகவல்களை முழுமையாக வழங்குவதற்கு கடைசி வாய்ப்பு வழங்கும் வண்ணம் 06.10.2020-க்குள் வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டிருந்தது. மனுதாரருக்கு எவ்வித தகவல்களும் வழங்கப்படவில்லை என்றாலோ, முழுமையற்ற தகவல்கள் வழங்கப்பட்டிருந்தாலோ அல்லது தவறான, குறைபாடான தகவல்கள் வழங்கப்பட்டிருந்தாலோ, மனுதாரர் 12.10.2020-க்குள் ஆணையத்திற்கு கடிதம் மூலம் தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

3. மேலே குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் ஆணையின்பால் மனுதாரரின் கவனம் ஈர்க்கப்படுகிறது. அந்த ஆணையில் மேற்கூறப்பட்ட வழக்கில் பொதுத் தகவல் அலுவலர் தகவல்களை வழங்க பணிக்கப்பட்டிருந்தார். அத்தகவல்களை C.No.93/DCM/RTI/Commission/2020, நாள் 02.10.2020 என்ற கடிதத்தின் வாயிலாக வழங்கியதாக பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்துள்ளார். (இணைப்பு). அதன்பின்னர், பல நாட்களாகியும் வரப்பெற்ற தகவல்கள் சம்மந்தமாக மனுதாரரிடமிருந்து எந்தவொரு ஆட்சேபணையும் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் 12.11.2020 வரை பெறப்படாத காரணத்தால், மனுதாரரின் வழக்கு முற்றாக்கி ஆணையிடப்படுகிறது.

**ஒம்/- (ரா. ராஜகோபால்)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA-6641/A/2020**

பெறுநர்

பொது அதிகார அமைப்பு

பொதுத் தகவல் அலுவலர் /
காவல் துணை ஆணையாளர்,
காவல் துணை ஆணையாளர் அலுவலகம்,
மயிலாப்பூர் மாவட்டம்,
சென்னை பெருநகர காவல், சென்னை-4.

மனுதாரர்

Thiru G.JAVEED SHAH,
S/o. Ghulam Mohammed Shah,
No.61/29, Mayor Chitti babu street,
Triplicane, Chennai-600 005.

PR/PS 12.11.2020

6641/A/2020

# சென்னை பெருநகர காவல்

| அனுப்புநர். | பெறுநர் |
|---|---|
| பொது தகவல் அதிகாரி<br>காவல் துணை ஆணையாளர்,<br>மயிலாப்பூர் மாவட்டம்,<br>மயிலாப்பூர், சென்னை -4 | உதவிப் பதிவாளர்,<br>தமிழ்நாடு தகவல் ஆணையம்,<br>எண்.2, தியாகராய சாலை,<br>தேனாம்பேட்டை, சென்னை — 18 |

032526
05 OCT 2020

C.No.93/DCM/RTI/Commission/2020 தேதி: 02.10.2020

அய்யா,

பொருள் : மயிலாப்பூர் காவல் மாவட்டம் - தமிழ்நாடு தகவல் ஆணையம் - ஆணை எண். SA-6641/A/2020 - மனுதாரரின் மேல் முறையீடு மனுவிற்கு பதில் அனுப்பிய விவரம் தெரிவித்தல் மற்றும் அதன் நகல்கள் சமர்பித்தல் - தொடர்பாக

பார்வை: ஆணை எண். SA-6641/A/2019, dt. 16.09.2020

*******

மேல் முறையீட்டாளர் திரு. ஜாவித் ஷா த/பெ குலாம் முகமது ஷப, எண்.61/29, மேயர் சிட்டிபாபு தெரு, திருவல்லிக்கேணி, செ்னனை-05 என்பவர் பொது தகவல் அலுவலர், காவல் துணை ஆணையாளர் அலுவலகம், கச்சேரி சாலை, மயிலாப்பூர், சென்னை — 04 என்ற முகவரிக்கு தகவல் அறியும் சட்டத்தின்படி தகவல் கோரி 19.03.2020 நாளிட்ட மனுவை அனுப்பியதாகவும், அதற்கான பதில் மனுதாருக்கு அளிக்கவில்லையென மேல்முறையீடு செய்துள்ளதால் தகவல் அளிக்கும் படி (ஆணை எண். SA-6641/A/2019, dt. 16.09.2020) ஆணை பிறப்பித்துள்ளது.

மேல்முறையீட்டாளர் அனுப்பிய மனு 26.01.2020 அன்று பெறப்பட்டு 23/DCMyp/PG/2020 என்ற எண்ணிட்டு விசாரணை மேற்கொண்டதில் இம்மனு தொடர்பாக டி2 அண்ணாசாலை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் CSR பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதால் Dy.Commissioner of Police /IUCAW அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இம்மனு தொடர்பாக 19.03.2020 தேதியிட்டு தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் கோரியதால் மனுதாருக்கு தகவல் அளிக்கும் பொருட்டு Dy.Commissioner of Police /IUCAW அவர்களுக்கு அனுப்பப்பட்டு அதன் நகலினை மனுதாரருக்கு பதிவுத்தபால் மூலம் தெரிவிக்கப்பட்டது. அதன் அத்தாட்சி நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் தங்கள் ஆணைப்படி மேலும், 29.09.2020 மனுதாரருக்கு தகவல் அனுப்பி அதன் நகல் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

2.10.2020

பொது தகவல் அதிகாரி
காவல் துணை ஆணையாளர்
மயிலாப்பூர் மாவட்டம்

நகல்:
காவல் துணை ஆணையாளர், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றவிசாரணை பிரிவு, ஆயிரம் விளக்கு, சென்னை.6
காவல் இணை ஆணையாளர், கிழக்கு மண்டலம், எழும்பூர், சென்னை.8

அனுப்புநர்.

காவல் துணை ஆணையாளர்,
மயிலாப்பூர் மாவட்டம்,
மயிலாப்பூர், சென்னை.4

பெறுநர்

திரு.ஜாவித் ஷா,
த/பெ குலாம் முகமது ஷா,
எண்.61/29, மேயர்சிட்டிபாபு தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5

C.No.93/DC MYP/RTI/2020 தேதி: 29.09.2020

Sir,

Ref: மயிலாப்பூர் காவல் மாவட்டம் - தமிழ்நாடு தகவல் ஆணையம் - ஆணை எண். SA-6641/A/2020 - மனுதாரரின் மேல் முறையீடு மனுவிற்கு பதில் அனுப்பிய விவரம் தெரிவித்தல் மற்றும் அதன் நகல்கள் சமர்பித்தல் - தொடர்பாக.

பார்வை: 1. RTI Commission No.SA/6641/A/2020

******

தாங்கள் அனுப்பிய மனு 26.01.2020 அன்று பெறப்பட்டு 23/DCMyp/PG/2020 என்ற எண்ணிட்டு விசாரணை மேற்கொண்டதில் இம்மனு தொடர்பாக டி2 அண்ணாசாலை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் CSR பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதால் Dy.Commissioner of Police /IUCAW அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

1. 19.03.2020 தேதியிட்டு காவல் துணை ஆணையாளர், மயிலாப்பூர் மாவட்டத்திற்கு அனுப்பிய மனு.
2. Cr&RTI/EZ/95/5908/2020, 19.05.2020 காவல் இணை ஆணையாளர் அவர்கள், கிழக்கு மண்டலத்திற்கு அனுப்பிய மனு.

ஆகிய இரண்டு மனுக்களும் தங்களுக்கு தகவல் அனுப்ப வேண்டி Dy.Commissioner of Police /IUCAW அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதன் விவரத்தினை தங்களுக்கு 22.09.2020 அன்று பதிவு தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

ET286950080IN IVR:6984286950080
SP MYLAPORE H.O <600004>
Counter No:3,30/09/2020,16:52
To:JAVEED SHAH..
PIN:600005, Tiruvallikeni S.O
From:DY COMMISSIONER OF MPOLICE..
Wt:20gms
Amt:17.70(Cash)Tax:2.70
<Track on www.indiapost.gov.in>

भारतीय डाक
India Post

Shaa 29.9.2020

காவல் துணை ஆணையாளர்
மயிலாப்பூர் மாவட்டம்

ok

**சென்னை பெருநகர காவல்**

அனுப்புநர்.

காவல் துணை ஆணையாளர்,
மயிலாப்பூர் மாவட்டம்,
மயிலாப்பூர், சென்னை.4

பெறுநர்

காவல் இணை ஆணையாளர்
கிழக்கு மண்டலம்
எழும்பூர், சென்னை-08

---

C.No.48,53/DC MYP/RTI/2020 தேதி: 14.09.2020

Sir,

Ref: 1. 19.03.2020 தேதியிட்டு காவல் துணை ஆணையாளர், மயிலாப்பூர் மாவட்டத்திற்கு அனுப்பிய மனு.
2. Cr&RTI/EZ/95/5908/2020, 19.05.2020 காவல் இணை ஆணையாளர் அவர்கள், கிழக்கு மண்டலத்திற்கு அனுப்பிய மனு.

******

மனுதாரர் திரு.ஜாவித் ஷா, த/பெ குலாம் முகமது ஷா, எண்.61/29, மேயர் சிட்டிபாபு தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5 என்பவர் எனது அலுவலகத்திற்கு 26.01.2020 அன்று தபால் மூலம் அனுப்பிய மனுவிற்கான விசாரணை அறிக்கை கோரியுள்ளார்.

மனுதாரர் அனுப்பிய புகார் பெறப்பட்டு 23/DCMyp/PG/2020 என்ற எண்ணிட்டு விசாரணை மேற்கொண்டதில் இம்மனு தொடர்பாக டி2 அண்ணாசாலை அனைத்து மகளிர் காவல் நிலையம் தொடர்புடையது என்பதால் Dy.Commissioner of Police /IUCAW அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. எனவே, மனுதாரருக்கு தகவல் அளிக்கும் பொருட்டு இம்மனுவை Dy.Commissioner of Police /IUCAW அவர்களுக்கு அனுப்பக்கோரப்பட்டுள்ளது.

G. Shah 21.9.2020

காவல் துணை ஆணையாளர்
மயிலாப்பூர் மாவட்டம்

நகல்:
திரு.ஜாவித் ஷா,
த/பெ குலாம் முகமது ஷா,
எண்.61/29, மேயர் சிட்டிபாபு தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5

Post on 22.9.20